**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6**
**மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகள், மார்ச் 2019**

**“சிறப்பு அனுமதி திட்டத்தின்” கீழ் தனித்தேர்வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்றல் குறித்த செய்திக் குறிப்பு**

மார்ச் 2019, மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வெழுத தேர்வுத்துறையால் அறிவிக்கப்பட்ட நாட்களுக்குள் ஆன்–லைனில் விண்ணப்பிக்கத் தவறி, தற்போது விண்ணப்பிக்க விரும்பும் தனித்தேர்வர்களிடமிருந்து சிறப்பு அனுமதி திட்டத்தின் கீழ் ஆன்–லைனில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**ஆன்–லைனில் விண்ணப்பிக்க வேண்டிய தேதிகள்**

தனித்தேர்வர்கள் ஆன்–லைனில் விண்ணப்பிப்பதற்காக ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் அரசுத் தேர்வுத் துறை சேவை மையம் அமைக்கப்பட்டுள்ளது. தனித்தேர்வர்கள் தாங்கள் எந்த கல்வி மாவட்டத்திலிருந்து விண்ணப்பிக்கிறார்களோ, அந்த மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வுத் துறை சேவை மையத்திற்கு **21.01.2019 முதல் 22.01.2019 வரையிலான நாட்களில்** நேரில் சென்று ஆன்–லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

கல்வி மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வுத் துறை சேவை மையங்களின் விவரத்தை www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் அறிந்துக் கொள்ளலாம்.

**மேல்நிலை முதலாம் ஆண்டு தேர்வெழுத விண்ணப்பிக்க தகுதியானவர்கள்**

1. மார்ச் 2018–ல் நடத்தப்பட்ட மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதி தேர்ச்சி பெறாத தனித்தேர்வர்கள் (H வகை), தேர்ச்சிப் பெறாத பாடங்களில் மீண்டும் தேர்வெழுத விண்ணப்பிக்கலாம்.
2. பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு அல்லது அதற்கு இணையான தேர்வில் தேர்ச்சி பெற்று **(மாவட்டக் கல்வி அலுவலர் வாயிலாக பெற்ற இணைச்சான்றிதழ் (Equivalence Certificate) சமர்பிக்கப்பட வேண்டும்)** ஓராண்டு இடைவெளியும் 01.03.2019 அன்று 15 ½ வயதும் பூர்த்தி அடைந்தவர்கள் மட்டுமே “நேரடித் தனித்தேர்வர்களாக” (HP வகையினர்) தேர்வெழுத விண்ணப்பிக்கலாம்.

**மேல்நிலை இரண்டாமாண்டு தேர்வெழுத விண்ணப்பிக்க தகுதியானவர்கள்**

1. மார்ச் 2018–ல் இத்துறையால் நடத்தப்பட்ட மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்வினை நேரடித் தனித்தேர்வராக எழுதி தேர்ச்சிப் பெற்ற / பெறாத தேர்வர்கள் அனைவரும், மார்ச் 2019 மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வெழுத விண்ணப்பிக்கலாம்.

2. பழைய நடைமுறையின்படி (ஒவ்வொரு பாடத்திற்கும் 200 மதிப்பெண்கள் வீதம் மொத்தம் 1200 மதிப்பெண்களுக்கு) மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வெழுதி தேர்ச்சி பெறாதோர், தேர்ச்சி பெறாத பாடங்களில் தேர்வெழுத விண்ணப்பிக்கலாம்.

<u>முக்கியக் குறிப்பு:-</u>

- **ஏற்கனவே பழைய நடைமுறையின்படி (ஒவ்வொரு பாடத்திற்கும் 200 மதிப்பெண்கள் வீதம் மொத்தம் 1200 மதிப்பெண்களுக்கு) மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வெழுதி தேர்ச்சி பெறாதோர் மற்றும் விண்ணப்பித்து வருகைபுரியாதோர், தேர்ச்சி பெறாத பாடங்களில் பழைய நடைமுறையின்படி (மொத்தம் 1200 மதிப்பெண்களுக்கு) தேர்வெழுத ஜுன் 2019 பருவம் மட்டுமே இறுதி வாய்ப்பாகும்.**

<u>தேர்வுக் கட்டணம், ஆன்–லைன் பதிவுக் கட்டண விவரம் மற்றும் செலுத்தும் விதம் :</u>

| | | | |
|---|---|---|---|
| 1. | ஏற்கனவே மேல்நிலை முதலாமாண்டு / இரண்டாமாண்டு பொதுத் தேர்வெழுதி தோல்வியுற்ற பாடங்களில் தேர்வெழுதும் தனித்தேர்வர்கள் | ஒவ்வொரு பாடத்திற்கும் ரூ.50/– வீதம் தேர்வுக் கட்டணமும், அதனுடன் இதரக் கட்டணமாக ரூ35/–ம் செலுத்த வேண்டும். | ஆன்–லைன் பதிவுக் கட்டணம் ரூ.50/– |
| 2. | மேல்நிலை முதலாமாண்டு அல்லது இரண்டாமாண்டு தேர்வினை முதன் முறையாக எழுதவுள்ள தனித்தேர்வர்கள் | தேர்வுக் கட்டணம் ரூ.150/–<br>இதரக் கட்டணம் ரூ.35/–<br>மொத்தம் ரூ.185/– | ஆன்–லைன் பதிவுக் கட்டணம் ரூ.50/– |

இவற்றுடன் கூடுதலாக சிறப்பு அனுமதி கட்டணமாக ரூ.1000/–ஐ பணமாக அரசுத் தேர்வுத் துறை சேவை மையத்தில் செலுத்த வேண்டும்.

தனித்தேர்வர்கள் செலுத்த வேண்டிய தேர்வுக் கட்டணத் தொகை Registration Slip –ல் குறிப்பிடப்பட்டிருக்கும்.

அரசுத் தேர்வுத் துறை சேவை மையத்தில் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்

மேல்நிலை முதலாமாண்டு (+1) தேர்வெழுத விண்ணப்பிக்கும் தனித்தேர்வர்கள் சேவை மையத்தில் (Service Centre) சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்

| | ஏற்கனவே +1 தேர்வெழுதி தோல்வியுற்றோர் | | முதன் முறையாக +1 தேர்வெழுதுவோர் |
|---|---|---|---|
| 1. | உரிய தேர்வுக் கட்டணம் + சிறப்பு கட்டணம் ரூ.1000/– + ஆன்–லைன் பதிவு கட்டணம் ரூ.50/– ஆகியவற்றை சேவை மையங்களில் (Service Centre) பணமாகச் செலுத்த வேண்டும். | 1. | உரிய தேர்வுக் கட்டணம் + சிறப்பு கட்டணம் ரூ.1000/– + ஆன்–லைன் பதிவு கட்டணம் ரூ.50/– ஆகியவற்றை சேவை மையங்களில் (Service Centre) பணமாகச் செலுத்த வேண்டும். |
| 2. | இணையதளம் பதிவிறக்கம் செய்யப்பட்ட ஏற்கனவே +1 தேர்வெழுதியதற்கான மதிப்பெண் பட்டியல் (Statement of Marks) நகல். | 2. | பத்தாம் வகுப்பு தேர்வில் தேர்ச்சி பெற்றதற்கான அசல் மதிப்பெண் சான்றிதழ். (அல்லது) பத்தாம் வகுப்பிற்கு இணையான தேர்வில் தேர்ச்சி பெற்றதற்கான அசல் சான்றிதழ் மற்றும் **அச்சான்றிதழ் பத்தாம் வகுப்பிற்கு இணையானததுதான் என்பதற்கான இணைச்சான்றிதழ் (Equivalence Certificate) ஆகியவற்றை கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டும்.** |
| 3. | ––– | 3. | பள்ளி மாற்றுச் சான்றிதழின் அசல் |
| 4. | ––– | 4. | இடப்பெயர்வு சான்றிதழ் அசல் (வெளி மாநிலத் தேர்வர்கள் மட்டும்) |

**<u>மேல்நிலை இரண்டாமாண்டு (+2) தேர்வெழுத விண்ணப்பிக்கும் தனித்தேர்வர்கள் சேவை மையத்தில் (Service Centre) சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்</u>**

| | **ஏற்கனவே +2 தேர்வெழுதி தோல்வியுற்றோர்** | | **புதிய நடைமுறையின்படி (600 மதிப்பெண்கள்) +2 தேர்வெழுதுவோர்** |
|---|---|---|---|
| 1. | உரிய தேர்வுக் கட்டணம் + சிறப்பு கட்டணம் ரூ.1000/– + ஆன்–லைன் பதிவு கட்டணம் ரூ.50/– ஆகியவற்றை சேவை மையங்களில் (Service Centre) பணமாகச் செலுத்த வேண்டும். | 1. | உரிய தேர்வுக் கட்டணம் + சிறப்பு கட்டணம் ரூ.1000/– + ஆன்–லைன் பதிவு கட்டணம் ரூ.50/– ஆகியவற்றை சேவை மையங்களில் (Service Centre) பணமாகச் செலுத்த வேண்டும். |
| 2. | இதுவரை எழுதிய மேல்நிலை இரண்டாம் ஆண்டு தேர்வுகளுக்கான மதிப்பெண் சான்றிதழ்களின் நகல் | 2. | இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்ட மேல்நிலை முதலாமாண்டு (+1) தேர்வெழுதி பெற்ற மதிப்பெண் பட்டியல் (Statement of Marks) நகல். |
| 3. | தேர்வெழுத தேவையான வருகைப் பதிவு உள்ளது என்பது தொடர்பாக பள்ளித் தலைமை ஆசிரியரிடம் பெற்ற தகுதிச் சான்றிதழ் (பள்ளி மாணவராக தேர்வெழுத பதிவு செய்து தேர்வெழுதாதவர்களுக்கு மட்டும்). | 3. | ––– |
| 4. | செய்முறை மதிப்பெண்களுக்கான ஆவணம் (செய்முறை அடங்கிய பாடங்களைத் தேர்வெழுதுவோர் மட்டும்) | 4. | ––– |

**<u>தேர்வுக்கூட அனுமதிச் சீட்டுகள் விநியோகம்</u>**

தேர்வுக் கூட அனுமதிச் சீட்டுகள் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும். பதிவிறக்கம் செய்ய வேண்டிய நாட்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இணையதளத்தில் வெளியிடப்பட்ட அறிவுரைகளின்படி (தேர்வுக் கட்டண விவரம் தவிர்த்து) வயது வரம்பு, கல்வித் தகுதி மற்றும் பாடங்கள் வகைப்பாடு அறிந்து அதன்படி விண்ணப்பிக்க வேண்டும்.

தனித்தேர்வர்களுக்குத் தற்போது வழங்கப்படும் அனுமதி முற்றிலும் தற்காலிகமானது எனவும், தனித்தேர்வர்களின் விண்ணப்பம் மற்றும் தகுதி குறித்து ஆய்வு செய்யப்பட்ட பின்னரே தேர்வு முடிவுகள் வெளியிடப்படும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

**ஒம்./–**
**இயக்குநர்**

சென்னை–600 006
நாள்: 09.01.2019